சுற்றறிக்கை இலக்கம் - **PRE/2024/46**

| TR - 08 |
|---|

எனது இலக்கம் :- TR/PRE/CIR/2024
தேர்தல் ஆணைக்குழு,
சரண மாவத்தை, இராஜகிரிய.
2024.08.

**சகல மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும்**
**பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு,**

**சனாதிபதித் தேர்தல் - 2024.09.21**
**வாக்கெடுப்பு நிலைய சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களால் எடுத்துவரப்படுகின்ற தனிப்பட்ட வாகனங்களை வாக்கெடுப்பு நிலையக் கடமைகளுக்குப் பயன்படுத்தல்**

வாக்கெடுப்பு நிலைய கடமைகளுக்காக சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களாக நியமிக்கப்படும் தங்களது மாவட்டத்தில் கடமையாற்றும் அலுவலர்களிடம் தனிப்பட்ட வாகனங்கள் இருப்பின் அவற்றை மாவட்டத்திற்குள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் கீழ் வாக்கெடுப்பு நிலையக் கடமைகளுக்காக கொண்டு செல்வதற்கு அனுமதி வழங்க முடியும். அவ்வாறு கொண்டு செல்லப்படும் பெற்றோல் வாகனங்களுக்கு ஒரு கிலோமீற்றருக்கு ரூபா 52.00 மற்றும் டீசல் வாகனங்ளுக்கு ஒரு கிலோமீற்றருக்கு ரூபா 47.00 வீதமும் கொடுப்பனவினை மேற்கொள்ள முடியும். தமது சேவை நிலையம் அமைந்துள்ள மாவட்டத்திலிருந்து வெளிமாவட்டம் ஒன்றிற்கு சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலராக கடமைக்காக நியமிக்கப்படும் அலுவலர்கள் இருப்பின் அவர்கள் தமது சொந்த வாகனத்தினை வாக்கெடுப்புக் கடமைகளுக்காக **கொண்டுசெல்லக் கூடாது.**

**02. நிபந்தனைகள்**

I. அவ்வாகனம் கலகங்கள் மற்றும் மக்கள் கொந்தளிப்பு போன்றவற்றிற்கான பூரண காப்புறுதி செய்யப்பட்ட வாகனமாக இருத்தல் மற்றும் வாகனம் மிகவும் சிறந்த ஓட்டத் தரத்தில் இருத்தல்.

II. சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் வாகனத்தினைச் செலுத்தக் கூடாதென்பதுடன், அதற்காக தனிப்பட்ட ரீதியில் சாரதியொருவரை ஈடுபடுத்துதல் வேண்டும். தேர்தல் பணியாள் குழாமுக்கான கொடுப்பனவுகள் தொடர்பான சுற்றறிக்கையில் தனிப்பட்ட சாரதியொருவருக்கான கொடுப்பனவு சம்பந்தமாக குறிப்பிடப்பட்டுள்ளது. (சாரதியின் பெயருக்கு காசோலை மூலம் கொடுப்பனவு வழங்கப்படும்)

III. அவ்வாகனம் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர், அலுவலகப் பணியாளர், இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் சாரதி உட்பட ஐந்து பேருக்கு வசதியாகப் பயணம் செய்யக்கூடியதாக இருத்தல் வேண்டுமென்பதுடன், அவர்களின் பயணப் பொதிகள், வாக்குப் பெட்டிகள் உட்பட ஏனைய பாதுகாப்பான பொருட்களைக் கொண்டு செல்லக்கூடியதான இடவசதி இருத்தல் வேண்டும். இதற்காக மாருதி, மார்ச், ஸ்டார்லட் போன்ற சிறிய கார்களை (Beetle Cars) பயன்படுத்தல் ஆகாது.

IV. தனிப்பட்ட வாகனத்தை பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கும் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் அதன் பொருட்டு தங்கள் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலர்/ மேலதிக/ பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளரின் முன்னனுமதியினைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதனை தயவுசெய்து அவர்களுக்கு அறிவிக்கவும்.

V. குறித்த வாகனத்தை தமது அலுவலகக் குழாமினர் மற்றும் வாக்குப் பெட்டிகளை எடுத்துக் கொண்டு வாக்கெடுப்பு நிலையத்திற்கு செல்வதற்கும் வாக்கெடுப்பு முடிந்ததன் பின்னர் அந்தப் பெட்டிகளை மீளக் கொண்டு வருவதற்கும் ஈடுபடுத்தியிருந்தால் மாத்திரமே மேலே குறிப்பிடப்பட்டுள்ள கிலோமீற்றர் கட்டணத்தைச் செலுத்த முடியும்.

VI. வாக்கெடுப்பு நிலைய சிரேட்ட தலைமை தாங்கும் உத்தியோகத்தர்களால் கொண்டு வரும் தனிப்பட்ட வாகனங்கள் சம்பந்தமான விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்கான (V-3) மாதிரிப் படிவம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அதனை மூன்று பிரதிகளில் நிரப்பிப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பதுடன் கடமை முடிவடைந்ததன் பின்னர் அதன் B பகுதியினை பூரணப்படுத்தி அதில் இரு பிரதிகளை சிரேட்ட தலைமை தாங்கும் உத்தியோகத்தர்களிடம் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவும். இதில் ஒரு பிரதியை சிரேட்ட தலைமை தாங்கும் உத்தியோகத்தரின் வாகனத்திற்குரிய கொடுப்பனவு உறுதிச்சீட்டுடன் (வவுச்சருடன்) இணைத்து சமர்ப்பிக்க வேண்டுமென்பதுடன் மற்றையதை அவரின் சாரதியின் கொடுப்பனவு உறுதிச்சீட்டுடன் (வவுச்சருடன்) இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும்.

VII. வாக்குப் பெட்டிகள் மற்றும் ஏனைய பொருட்களை எடுத்துக் கொண்டு விநியோக நிலையத்திலிருந்து தமக்குரிய வாக்கெடுப்பு நிலையத்திற்குச் செல்வதற்காக பிரயாணம் செய்த தூரத்திற்கும் வாக்கெடுப்பு முடிவடைந்த பின்னர் வாக்குப் பெட்டிகளை கையளிப்பதற்காக மீண்டும் வருவதற்குமான தூரத்தையும், தான் வசிக்கும் வீடு சேவை நிலையம் அமைந்துள்ள மாவட்டத்திற்குள் அமைந்திருந்தால் அவர் பிரயாணத்தை ஆரம்பித்த இடமாக, அவரது வீடு எனக் கருதி வீட்டிலிருந்து குறித்த விநியோக மத்திய நிலையத்திற்கு வருவதற்கும் கடமை முடிவடைந்த பின்னர் மீண்டும் தனது வீடு வரை செல்வதற்கும் உள்ள தூரத்தைக் கருத்திற் கொண்டு மொத்தத் தூரத்திற்குமாக ஒருமுறை மட்டும் கிலோமீற்றர் கட்டணத்தைச் செலுத்த முடியும்.

VIII. <u>இக்கொடுப்பனவு மற்றும் சாரதியின் கொடுப்பனவும் தேர்தல் அலுவலகங்களின் ஊடாக மாத்திரம் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், வேறு அலுவலகங்கள் மூலம் கொடுப்பனவு செய்து அத் தொகையை மீளளிப்புச் செய்வதற்காக சமர்ப்பிக்க வேண்டாமென அறிவுறுத்தல் வழங்குதல் வேண்டும். அவ்வாறான கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டால் அவை நிராகரிக்கப்படும் என்பதனை தயவுசெய்து அறிவிக்கவும்.</u>

இவ்வாகனங்களுக்கு அலுவலரின் சேவை நிலையத்திலிருந்து அல்லது தேர்தல் கடமை வழங்கப்பட்டுள்ள மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் / மேலதிக / பிரதி / உதவித் தேர்தல் ஆணையாளர் அலுவலகத்திலிருந்து அல்லது எந்த முறையிலும் எரிபொருள் வழங்கப்படக் கூடாது.

03. சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களால் எடுத்து வரப்படும் வாகனங்களுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளும்போது **<u>வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்படும் வாகனங்களுக்கு செலுத்தப்படும் கட்டணங்களின் அடிப்படையில் கொடுப்பனவுகளை மேற்கொள்ளாதிருப்பதற்கு</u>** உரிய அதிகாரிகள் பொறுப்புடன் அலுவல் மேற்கொள்ள வேண்டுமெனவும் தயவுடன் அறியத் தருகிறேன் .

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்.

**பிரதிகள் :**

1. கணக்காய்வாளர் நயகம்
2. செயலாளர், தேர்தல் ஆணைக்குழு.
3. மேலதிகத் தேர்தல்கள் ஆணையாளர் (தேசியத் தேர்தல்கள்)
4. தலைமை நிதி அலுவலர்
5. தலைமை உள்ளகக் கணக்காய்வாளர்

} தயவன்புடன் தகவலுக்காக

(3 பிரதிகளில் பூரணப்படுத்துக)

V-3

**சனாதிபதித் தேர்தல் - 2024.09.21**
**சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களினால் கொண்டு வரப்படுகின்ற தனிப்பட்ட வாகனங்கள் தொடர்பான தகவல்கள்**

01. அலுவலரின் பெயர் : ......................................................................................
02. அலுவலக முகவரி : ......................................................................................
03. தனிப்பட்ட முகவரி : ......................................................................................
04. கை. தொ இலக்கம் : ......................................................................................
05. சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலராக நியமிக்கப்பட்டுள்ள மாவட்டம் : ....................................
**(இது உங்கள் கடமை நிலையம் அமையப்பெற்றுள்ள மாவட்டமாக இருத்தல் வேண்டும்)**
06. உமது தனிப்பட்ட வாகனம் பற்றிய தகவல்கள்
**(வருமான அனுமதிப் பத்திரத்தின் புகைப்படப்பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்.)**
வாகனத்தின் இலக்கம் : ................................................ (பெற்றோல்/டீசல்)*
வகை : .................................. ஆசனங்களின் எண்ணிக்கை : ..............................................
வாகனத்தைச் செலுத்தும் சாரதியின் பெயர் : ..........................................................
முகவரி : ......................................................................................
சாரதியின் அனுமதிப் பத்திர இலக்கம் : ....................................................................

07. வீட்டிலிருந்து விநியோகித்தல் நிலையத்திற்குள்ள தூரம் (கி.மீ.) : ................................................

மேற்படி தகவல்கள் உண்மையானதெனவும் சரியானதெனவும் உறுதிப்படுத்துகிறேன். தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தின் PRE/2024/46 மற்றும் 2024.08.26 ஆந் திகதிய சுற்றறிக்கையிலுள்ள நிபந்தனைகள் மற்றும் கிலோமீற்றருக்கு *பெற்றோல் வாகனத்திற்கு ரூபா 52/- வீதமும் *டீசல் வாகனத்திற்கு ரூபா 47/- வீதத்தின்படியான கட்டணத் தொகையின் கீழ் கொடுப்பனவினைப் பெற்றுக் கொள்வதற்கு இணங்குகிறேன்.

திகதி : 2024.............. ..........................................

அலுவலரின் கையொப்பம்

சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலராக தெரிவு செய்யப்பட்டுள்ள மேற்குறிப்பிட்ட அலுவலருக்குரித்தான ................................ ஆம் இலக்கம் கொண்ட வாகனத்தை அவருக்குரிய வாக்கெடுப்பு நிலையக் கடமைக்காக ஈடுபடுத்துவதற்கு அனுமதியளிக்கின்றேன்.

திகதி : 2024.............. ....................................................

உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் (போக்குவரத்து)
(பெயருடன் கூடிய உத்தியோகபூர்வ இலச்சிணையை இடவும்)

---

**(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்) – (பகுதி – B)**

1. வீட்டிலிருந்து குறிப்பிட்ட நிலையத்திற்குள்ள தூரம் (கி.மீ)x2 - ................................
   A. விநியோகிக்கும் நிலையத்திலிருந்து வெளியேறும்போது மைலோ மீட்டரின் வாசிப்பு - .....................
   B. கையேற்கும் நிலையத்திற்கு மீண்டும் வந்ததன் பின்னர் மைலோ மீட்டரின் வாசிப்பு - .......................
2. பிரயாணம் செய்யும் தூரம் : (B-A) = ..............................

PRE/2024/46 மற்றும் 2024.08.26 ஆம் திகதி சுற்றறிக்கையின்படி தேர்தல் கடமைகள் தொடர்பாக போக்குவரத்து செய்துள்ள முழுத் தூரம் கி.மீ. : (1+2) - ..............................

திகதி : 2024................. ......................................................

உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் (போக்குவரத்து)
(பெயருடன் கூடிய உத்தியோகபூர்வ இலச்சிணையை இடவும்)

**கவனிக்க :** சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரினால் இப்படிவத்தை மூன்று பிரதிகளில் பூரணப்படுத்திய பின், அதனைப் பெற்றுக் கொண்டு கடமை முடிந்து மீண்டும் செல்வதற்கு முன்னர் பகுதி – B யை பூரணப்படுத்தி இரு பிரதிகளை அவரிடம் மீண்டும் கையளிக்கவும். ஒரு பிரதியை கிலோமீட்டர் கட்டணத்துக்கான வவுச்சருடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டுமெனவும் மற்றைய பிரதியை தனது சாரதியின் கொடுப்பனவு சம்பந்தமான வவுச்சருடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டுமெனவும் அவ்வலுவலருக்கு தெரியப்படுத்தவும்.

(*தேவையற்ற சொற்களை வெட்டிவிடவும்)